**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

ந.க.எண்: 1077/A11/பமேகு/ஓபக/2025, நாள் 27/11/2025

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – அனைத்து வகை அரசுப் பள்ளிகளில் டிசம்பர்-2025 மாதத்திற்கான பள்ளி மேலாண்மை குழு கூட்டம் – **05.12.2025, வெள்ளிக் கிழமை** அன்று நடத்துதல் - கூட்டப் பொருள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** (1) அரசாணை (நிலை) எண்.144, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள். 28.06.2024

(2) பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணை செயல்முறைகள் ந.க.எண்.9111/கே2/2025, நாள்: 02.07.2025

(3) பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 012381/ஜெ2/2025, நாள்: 11.07.2025

(4) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண். 32841/எம்1/இ1/2025, நாள்:02.07.2025.

(5) பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 034785/எம்/இ1/2025, நாள்: 30.06.2025.

*** *** ***

பார்வை-1-இன்படி அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பானது 2024 ஆகஸ்ட் மாதத்தில் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு செயல்பட்டு வருகிறது. பார்வை-2 மற்றும் 3-இன்படி பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் முன்னேற்றத்தில் பங்களிக்கும் வகையில் மாதம் தோறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, டிசம்பர்-2025 மாதத்திற்கான பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டமானது அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் வருகின்ற **05.12.2025, வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை** கீழ்காண் கூட்டப் பொருள்கள் மற்றும் பள்ளியின் முக்கியத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு நடத்தப்பட வேண்டும்.

## I. கூட்டப் பொருள்கள்:

### 1. திறன் இயக்கம் (THIRAN)

a) திறன் மாணவர்களில் நவம்பர் மாத மதிப்பீட்டு முடிவுகளின் அடிப்படையில் "அடிப்படைக் கற்றல் விளைவில்" (Basic Learning Outcome) பாடவாரியாகத் தேர்ச்சி அடைந்த மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் முந்தைய மாத மதிப்பீட்டிலிருந்து அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதிக்க வேண்டும்.

b) திறன் மாணவர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள தரநிலை அறிக்கை (Report Card) பதிவிறக்கம் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைக் குறித்து விவாதிக்க வேண்டும்.

c) அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 15ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளது. அதில் திறன் மாணவர்களுக்கு "திறன் புத்தகக்கதை" அடிப்படையாகக் கொண்டு வினாத்தாள் வழங்கப்படும்.

### 2. எண்ணும் எழுத்தும்

a) வகுப்பு 1 முதல் 5 வரை உள்ள மாணவர்களுக்கு இரண்டாம் பருவத்தேர்வு டிசம்பர் 15 முதல் 23 வரை நடைபெறவுள்ளது என்பதையும், இந்த நாட்களில் மாணவர்கள் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வரவேண்டும் என்பதையும் பள்ளி மேலாண்மைக் குழு வாயிலாக தெரிவிக்க வேண்டும்.

b) இந்த கல்வியாண்டிற்கான வகுப்பு வாரியான கற்றல் இலக்குகளைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தி, அதை அடைய எடுக்கப்படும் பள்ளி அளவிலான சிறப்பு முன்னெடுப்புகள் என்ன என்பது குறித்தும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும். **(கற்றல் இலக்குகள் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.)**

### 3. உயர்கல்வி வழிகாட்டி

a) கடந்த கல்வியாண்டில் (2024-2025) அரசு பள்ளிகளில் பயின்று 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களில் 16,929 மாணவர்கள் இன்றைய தேதிப்படி எந்த உயர்கல்வியிலும் சேரவில்லை. அம்மாணவர்களை கண்டறிந்து ஊக்குவித்து, திறன் சார்ந்த படிப்புகளில் சேர பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உதவிடக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

b) அரசு பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாதந்தோறும் உயர்கல்வி வழிகாட்டி வகுப்புகள் நடைபெறுவதை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும்.

c) 2025 டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள Higher Education Survey-யில் அரசு பள்ளிகளில் பயிலும் 11ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பங்கேற்பதை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும்.

d) அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டி குழு சிறப்பாகச் செயல்படுவதை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும்.

e) 2025 டிசம்பர் 7ஆம் தேதி நடைபெறவிருகின்ற CLAT போட்டித் தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தேர்வெழுதுவதைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும்.

**4. அனைத்து குழந்தைகளும் பள்ளியில் (ACiS)**

**a)** இடைநின்ற மற்றும் இடைநிற்க வாய்ப்புள்ள குழந்தைகள் 9 - 12 வகுப்பில் இருப்பதற்கு வாய்ப்புள்ளதால், பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள இல்லம் தேடிக் கல்வியாளர், முன்னாள் மாணவர்கள், சுய உதவிக் குழுவினர், தலைவர் மற்றும் செயலர் இவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இடை நின்ற மாணவர்களின் பட்டியலை பகிர்ந்து அவர்களை மீண்டும் பள்ளிக்கு அழைத்துவர தீர்மானம் நிறைவேற்றுதல் வேண்டும்.

**b)** குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு இவற்றின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, இவை அனைத்தும் இல்லாமல் தடுப்பதற்கு உறுதுணையாக உள்ள 1098 மற்றும் 14417 ஆகிய எண்களுக்கு உடனடித் தகவல் கொடுப்பது என தீர்மானம் நிறைவேற்றுதல் வேண்டும்.

**5. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான செயல்பாடுகள்:**

**a) <u>ஆட்டிசம் குழந்தைகளை கண்டறிதல்</u> :**

- பெயர் சொல்லி அழைத்தால் திரும்பாமல் இருப்பது.
- கண்களை பார்க்காமல் உரையாடுவது.
- ஒரே செயலை மீண்டும் மீண்டும் செய்வது.

குழந்தைகளுக்கு மேற்கூறிய அறிகுறிகள் இருப்பின், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலோ அல்லது மாவட்ட தலைமை மருத்துவமனையிலோ அமைந்திருக்கும் மாவட்ட ஆரம்ப இடையீட்டுச் சேவை மையத்தை (DEIC) அணுகி உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உதவி பெறுவது அவசியம் என்கிற விழிப்புணர்வை பெற்றோர்களுக்கு ஏற்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கவேண்டும்.

b) மருத்துவ மதிப்பீட்டு முகாம்:

ஒன்றிய அளவில் நவம்பர்-2025 மற்றும் டிசம்பர்-2025 ஆகிய மாதங்களில் நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான (பிறப்பு முதல் 18 வயது வரை) மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடத்துதல் சார்ந்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும். இதில் அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் கலந்து கொண்டு பயனடைய ஆவண செய்தல் வேண்டும்.

## 6. மணற்கேணி தூதுவர்கள்

மணற்கேணித் தூதுவர்கள் மூலம் பதிவிறக்கம் செய்வது சம்பந்தமாக கடந்த இரண்டு பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தங்களில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் மணற்கேணி செயலி Whatsapp குழுவில் இணைக்கப்பட்டு அதன் வழியாகத் தங்களது குழந்தைகள் வீட்டில் மணற்கேணி செயலியைத் தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதிசெய்வதோடு,

a) மணற்கேணி செயலி நடைமுறைபடுத்தாத பள்ளிகளில் நடைமுறைபடுத்துதல்.
b) நடைமுறைபடுத்தப்பட்ட பள்ளிகளில் மாணவர்கள் பின்பற்றுகிறார்களா என பெற்றோர் ஆசிரியர்களுடன் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுதல்.
c) சிறந்த முறையில் மணற்கேணி செயலி துணை கொண்டு மாணவர்கள் புதிய முறைகளை, கருத்துக்களைப் பதிவு செய்ய ஊக்குவித்தல்.
d) சிறந்த முறையில் பதிவு செய்து தொடர்ந்து பயன்படுத்தி வரும் மாணவரை SMC கூட்டத்தில் அழைத்து பாராட்டுதல்.
e) 100% பதிவிறக்கம் செய்த பள்ளிகளுடைய பட்டியலை பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான கல்வி அலுவலர்கள் மூலம் அப்பள்ளியை கௌரவித்தல் போன்ற செயல்பாடுகளை பள்ளித் தலைமையாசிரியர் உறுதிசெய்திடல் வேண்டும்.

## 7. மகிழ்முற்றம் (All Schools)

a) மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் குறித்துப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.
b) மகிழ்முற்றம் மாணவர் குழுத் தலைவர்கள் (5 House Captains), மகிழ்முற்றம் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (House System Teacher Co-ordinator), ஒவ்வொரு குழுவின் பொறுப்பாசிரியர் (House Head Teacher) இக்கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

c) மாதத்தின் முதல் திங்கள் அன்று நடைபெறும் பள்ளியளவிலான House Committee Meeting குறித்தும், அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் SMC உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

d) ஒவ்வொரு வகுப்பறையிலும் பராமரிக்கப்படும் Class Room Score Board மற்றும் அதன் தொகுப்பான பள்ளி அளவில் பராமரிக்கப்படும் School Score Boardஇன் அடிப்படையில் கடந்த மாதத்தின் House of the Month குழு எது என்பதை எடுத்துரைத்தல் வேண்டும்.

e) பள்ளியளவில் மகிழ்முற்றம் மாணவர் குழு ஏற்படுத்தியுள்ள நேர்மறையான மாற்றங்களைக் குறித்துக் கலந்துரையாடி அதனைக் கூட்டத் தீர்மானங்களில் குறிப்பிடவேண்டும்.

f) மேலும் இந்த மாற்றங்களை magizhmutram@tnschools.gov.in என்ற Email IDக்கு அனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் அனுபவங்களைக் கனவு ஆசிரியர் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும். இது குறித்து மேலும் அறிந்துகொள்ள கீழ்காண் QR Coodeஐ scan செய்யவும்.

| | |
|---|---|
| MM Magazine Content<br>https://bit.ly/MMMagazinecontent | |

**8. மன்றச் செயல்பாடுகள் (schools with grades 6, 7, 8 & 9)**

**a)** ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மன்றச் செயல்பாடுகள் பாடவேளையின் போது இலக்கிய, வினாடி வினா மற்றும் சிறார் திரைப்பட மன்றச் செயல்பாடுகள் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி முறையாக மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வழியாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

**9. ஆதார் புதுப்பித்தல்:**

a. ஆதார் முக்கியத்துவம் மற்றும் புதுப்பித்தல் சார்ந்த தகவல்களைப் பள்ளி மேலாண்மைக் குழு வாயிலாக அனைத்துப் பெற்றோர்களுக்கும் தெரிவித்துத் தங்கள் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளும் பயோமெட்ரிக்ஸ் புதுப்பிக்கப்பட்ட ஆதார் பெற்றுள்ளதை உறுதி செய்யத் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும்.

**b.** இன்றைய சூழலில் மாணவ / மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, ஊக்கத்தொகை போன்றவற்றை வழங்க வங்கிக் கணக்கு துவங்கும் போதும், உயர்கல்விக்கு விண்ணப்பிக்கும் போதும் மேலும் அரசு சார்ந்த பல சேவைகளைப் பெறும்போதும் புதுப்பிக்கப்பட்ட பயோமெட்ரிக்குடன் கூடிய ஆதார் வைத்திருப்பது கட்டாயமாகிறது. இதில்

5 வயது முதல் 7 வயது வரை மற்றும் 15 வயது முதல் 17 வயது வரை உள்ள மாணவ, மாணவிகளுக்கு **ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தல் முதல் முறை இலவசமாக அரசு வழங்கி வருகிறது**, மேலும் **2025 நவம்பர் 1-ஆம் தேதி முதல் அடுத்த ஓராண்டுக்கு 8 முதல் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தலுக்கு சேவை கட்டணம் இல்லை என்ற தகவலை அனைத்து பெற்றோருக்கும் தெரிவித்து,**

c. அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் இதுவரை ஆதார்பெற விண்ணப்பித்துப் பெறாத மாணவர்கள் உடனடியாக விண்ணப்பித்துப் பெற்று ஆதார் நகலை பள்ளியில் சமர்ப்பிக்க வேண்டுமாறும், மேலும் ஆதார் வைத்துள்ள மாணவ மாணவிகளின் ஆதார் பயோமெட்ரிக் புதுப்பிக்காதவர்கள் அருகாமையில் உள்ள ஆதார் மையங்கள் வாயிலாக ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தலை மேற்கொண்டு அதற்கான பற்றுச் சீட்டை பள்ளியில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற தகவலை பள்ளி மேலாண்மை குழு வாயிலாக அனைத்து பெற்றோர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

## II. வழிகாட்டுதல்கள்

**(அ) பள்ளி மேலாண்மைக் குழுவும், துறை சார்ந்த அலுவலர்களும்:**

a) பள்ளிக் கல்வித் துறை மூலம் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை நகலினை பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவருக்கு அளிக்க அறிவுறுத்த வேண்டும்.

b) பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிட வருவதைத் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கும் சூழலில் அதன் விவரங்களைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குத் தலைமையாசிரியர் முன்னதாகத் தெரிவிக்க வேண்டும்.

c) கல்வி அலுவலர்கள் தவிர பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினரல்லாத வேறு எந்தவொரு நபரும் பார்வையாளர்களாகக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதியில்லை.

d) பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தின் **உறுப்பினர் வருகை மற்றும் தீர்மானங்களின் திட்டமிடல்** உள்ளிட்ட விவரங்களை, **கூட்ட நாளன்று இரவு 9 மணிக்குள் "TNSED Parent" (பெற்றோர் செயலி) Appஇல் தவறாது பதிவிடக் கேட்டுக்கொள்ள வேண்டும்**.

e) பருவ மழை அல்லது உள்ளூர் நிகழ்வுகள் உள்ளிட்ட காரணங்களினால் மாவட்ட நிர்வாகத்தால் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படும் நேர்வுகளில் சார்ந்த பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அடுத்துவரும் வேலை நாளில் பள்ளித் தலைமையாசிரியர்கள் நடத்திட வேண்டும்.

## III. காணொலிகள்

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த செயல்பாடுகளுக்கானக் காணொலிகள் (Best Practices Videos) வருகைப் பதிவு மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்ந்த செயலியின் காணொலிகளுக்கான **QR-Code மற்றும் இணைப்பு** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**SMC Support Videos:**
https://bit.ly/SMCSupportvideos

மேற்காணும் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி உரிய நேரத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் சிறப்பாக நடத்திட தீர்மான விவரங்களைப் பெற்றோர் செயலியில் பதிவேற்றம் செய்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

**பெறுநர்:**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து வகைப் பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் (சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர் வாயிலாக)

**நகல்:**

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6

**இணைப்பு –I**

## பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை (மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள்)

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 - 3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | ★ கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தலைமையாசிரியருடன் இணைந்து பள்ளி வளாகத்தைப் பார்வையிட வேண்டும்.<br>★ வளாகப் பார்வையிடலின் போது மாணவ மாணவியருக்கான கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றைப் பார்வையிட்டு தேவைகளை அடையாளம் காணுதல்.<br>★ தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவைகளை அடையாளம் காணுதல். | 10 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:10 - 3:15 | ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடல் | பள்ளிக் கல்வித் துறை அதிகாரப்பூர்வமாக வழங்கிய பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடுகள் குறித்த ஊக்கமூட்டும் காணொலிகளைத் திரையிடுதல். | 5 நிமிடங்கள் |
| 3:15 - 3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகை பெற்றோர் செயலியில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவரும், தலைமையாசிரியரும் இணைந்து பதிவு செய்ய வேண்டும். | 5 நிமிடங்கள் |
| 3:20 - 4:00 | வரவேற்பு<br>திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | 1) உறுப்பினர்களை வரவேற்று, கூட்டத்தின் நோக்கத்தை தலைமையாசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>2) உறுப்பினர்கள்/சிறப்பு அழைப்பாளர் அறிமுகம் (புதிய நபர்கள் இருப்பின்)<br>3) மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருளை (Preparing Meeting Agenda) தயாரித்து குழுவில் வாசித்தல். | 40 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| | | 4) தவிர்க்கவியலாத கூட்டப் பொருள்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்து சேர்த்துக் கொள்ளுதல். | |
| 4:00 - 4:25 | கூட்டப் பொருள் (meeting agenda) மீதான விவாதம்<br><br>தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள்கள் (Meeting Agenda) ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களைத் பள்ளியில் பராமரிக்கப்படும் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 25 நிமிடங்கள் |
| 4:25 - 4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | தலைவர்/தலைமையாசிரியர் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |

# எண்ணும் எழுத்தும்

## கற்றல் இலக்குகள்

**2025 – 2026**

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு இலக்குகளை அடைவதற்காக, ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய கற்றல் விளைவுகள் மாணவர்களால் அடையப்படுவது மிகவும் முக்கியமானது.

**GRADE 1**

### வாசிப்பு & மொழித்திறன்

- எழுத்து–ஒலிகளை அறிந்து எளிய 2–3 எழுத்துச் சொற்களை வாசித்தல்.
- ஒரு குறுந் தகவலைக் கேட்டு கேள்விகளுக்கு பதிலளித்தல்

### கணிதம்.

- 20 வரை எண்களை அடையாளம் காணுதல்.
- எளிய கூட்டல் மற்றும் கழித்தல் செய்தல்.

**GRADE 2**

### வாசிப்பு & மொழித்திறன்

- 4–5 எழுத்துச் சொற்களைக் கொண்ட எளிய வாக்கியங்களை வாசித்தல்
- 2–3 எளிய வாக்கியங்களை எழுதுதல்

### கணிதம்

- 1 முதல் 99 வரை எண்களை வாசித்து எழுதுதல்
- 99 வரை கூட்டல் மற்றும் கழித்தல் செய்தல்

**GRADE 3**

### வாசிப்பு & மொழித்திறன்

- வாய்மொழி வாசிப்பு திறன் 45–60 wpm அளவில் வாசித்து பொருள் புரிதல்
- 4–5 சொற்கள் கொண்ட குறுஞ் வாக்கியங்களை எழுதுதல்

**கணிதம்:**

- 1 முதல் 999 வரை எண்களை வாசித்து எழுதுதல்
- 999 வரை கூட்டல் மற்றும் கழித்தல் செய்தல்

**GRADE 4**

**வாசிப்பு & மொழித்திறன்**

- வயதுக்கு ஏற்ற, அறியாத உரைகளை வாய்மொழி வாசிப்பு திறன் 60+ wpm உடன் வாசித்து புரிதல்
- 4–5 சொற்கள் கொண்ட வாக்கியங்களை எழுதுதல்

**கணிதம்**

- 1 முதல் 9999 வரை எண்களை வாசித்து எழுதுதல்
- எளிய பெருக்கல் & வகுத்தல் பிரச்சினைகளைச் செய்தல்

**GRADE 5**

**வாசிப்பு & மொழித்திறன்**

- வயதுக்கு ஏற்ற அறியாத உரைகளை வாய்மொழி வாசிப்பு திறன் 60+ wpm கொண்டு வாசித்து புரிதல்
- தனிப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறும் உரை எழுதுதல்

**கணிதம்**

- பெரிய எண்களுடன் பணியாற்றுதல்
- எளிய பெருக்கல் & வகுத்தல் செய்தல்

முடிவுக் குறிப்பு

இவை ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் விளைவுகள் ஆகும்.